# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20,வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2014.09.22

**ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 09/2014**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

<u>சம்பள அளவுத் திட்டத்தின் உச்சளவு தேக்க நிலைக்கான சம்பள ஏற்றங்களை வழங்குதல்.</u>

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2009.03.12 ஆம் திகதிய 909 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றிக்கையின் மூலம் திருத்தப்பட்டவாறான 2007.09.05 ஆம் திகதிய 894 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றிக்கை மற்றும் 2013.12.31 ஆம் திகதிய 20/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

சம்பள அளவுத் திட்டத்தின் உச்சளவு தேக்க நிலைக்கான சம்பள எற்றங்களை வழங்குதல் சம்பந்தமாக தெளிவுபடுத்துமாறு பல்கலைக்கழகங்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் மற்றும் அது தொடர்பான திறைசேரிச் செயலாளரின் DMS/E1/54/7/313/2 ஆம் இலக்க கடிதத்தின் ஊடாக விடுக்கப்பட்டிருக்கும் விதப்புரைகளின் பிரகாரம் தற்போது அமுலில் இருக்கும் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2014.08.07 ஆம் திகதி நடைபெற்ற தனது 899 ஆவது கூட்டத்தின்போது சம்பள அளவுத் திட்டத்தின் உச்சளவு தேக்க நிலைக்கான சம்பள ஏற்றங்களை வழங்குதல் சம்பந்தமாக கீழ் குறிப்பிடப்படும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு தீர்மானித்துள்ளது.

1. தமக்குரிய சம்பள சம்பள அளவுத் திட்டத்தின் உச்சளவு சம்பளப் படிநிலையை அடைந்துள்ள ஊழியர்களுக்கு 2014.01.01 ஆம் திகதி முதல் அந்த உச்சளவு தேக்க நிலையில் இருக்காது குறிப்பிட்ட சம்பள அளவுத் திட்டத்தில் இறுதி சம்பள ஏற்றத் தொகையின் பெறுமதிக்கு சமமான பெறுமதியினால் தனது சம்பள ஏற்றத்தை ஈட்டிக்கொள்வதற்கு இடமளித்தல் வேண்டும்.

2. இதன்போது, 2014.01.01 ஆம் திகதிக்கு முன்னரே சம்பள அளவுத் திட்டத்தில் உச்சளவில் அல்லது உச்சளவை விஞ்சிய யாதேனும் சம்பளப் படிநிலையில் தேக்க நிலையில் இருக்கும் ஊழியர்கள் தொடர்பாக அக்காலப் பகுதியினுள் உச்சளவு தேக்க நிலையில் இருந்த அனைத்து ஆண்டுகளுக்கும் உரித்தான சம்பள ஏற்றங்களை வழங்கி 2014 ஆம் ஆண்டுக்கான சம்பள ஏற்றத் திகதி வரை ஏற்புடைத்தாகும் சம்பளப் படிநிலையை சரிசெய்வதற்கும், 2014.01.01 ஆம் திகதிக்கு முந்திய காலப்பகுதிக்கான நிலுவைச் சம்பளத்தை வழங்காமல் இதனை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

3. உச்சளவு தேக்க நிலைக்கான சம்பள ஏற்றங்களை வழங்கும்போது வருடாந்த சம்பள ஏற்றங்களை வழங்குவதற்காகப் பின்பற்றும் செயலாற்றுகை மற்றும் வருகை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட நடைமுறையைப் பின்பற்றுவது உசிதமானதாகும்.

இந்த சுற்றறிக்கை அமுலுக்கு வந்தவுடன் 2007.09.05 ஆம் திகதிய 894 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை, 2009.03.12 ஆம் திகதிய 909 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை மற்றும் 2013.12.31 ஆம் திகதிய 20/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் இரத்துச் செய்யப்படுகின்றது.

இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவாய் வேண்டுகின்றேன்.

**ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர்,உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர்,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர்,பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர்,பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப்பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/9/86